national grid மூலம் கொண்டுசெல்வதற்குப் பாதை அமைக்கின்ற பணி ஆரம்பமாகும் நிலையில் இருக்கிறது. ஆகவே, அவற்றோடு இந்தக் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தையும் அந்த national grid–ல் இணைப்பதற்கு அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா; அவ்வாறு செய்வதற்கு வருங்காலத்தில் முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணு மின் நிலையம் அடுத்த ஆண்டுதான் மின்சார உற்பத்தி செய்ய இருக்கிறது. அதற்குத் தனியாக ஒரு grid அமைக்கப்பட்டு வருகிறது. அதுவரையிலே, காற்றாலைகள்மூலம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை, grid-லே இணைப்பதற்குக் காத்துக்கொண்டிருப்போமேயானால், அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரம் வீணாகப் போய்விடும். எனவே, இப்போதே அங்கே உற்பத்தி செய்துகொண்டிருக்கின்ற காற்றாலைகள்மூலம் வருகின்ற மின்சாரத்தை, grid மூலம் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர், திரு ம.அ. கலீலுர் ரஹ்மான், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**73—**

**பின்தங்கிய பகுதி**

***1007—திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி தொகுதி மிகவும் வறட்சிப் பகுதியாக இருப்பதால், இதனைப் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதியைப் பின்தங்கிய பகுதியாக அறிவிப்பது என்பது, அரசின் கொள்கை சார்ந்த முடிவாகும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2006 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு ம.அ. கலீலுர் ரஹ்மான்.

**திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதி, தமிழகத்திலேயே நிலப் பரப்பில் மிகப் பெரிய தொகுதி. அங்கு மழை மிகவும் குறைவாகப் பெய்கிறது. குறிப்பாக, கடந்த 10 ஆண்டுகளாக மழை மிக மிகக் குறைவாக பெய்துள்ளதால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனது தொகுதியில், எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லை. இருந்த ஒரு கூட்டுறவு நூற்பாலையும் மூடப்பட்டுவிட்டது. விவசாயிகள் மற்றும் ஏழையெளிய மக்களின் காவலராகத் திகழ்கின்ற நமது முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், வெகுவிரைவிலே, அரவக்குறிச்சி தாலுகாவை, மிகவும் பின்தங்கிய தாலுகாவாக அறிவித்து, எங்கள் பகுதியை மிகவும் பின்தங்கிய வறட்சிப் பகுதியாக அறிவித்து, எங்கள் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கனிவோடு வேண்டுகின்றேன் என்பதைத் தங்கள்மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட இரண்டு வட்டங்களிலே, அரவக்குறிச்சி வட்டம் ஒன்று; கரூர் வட்டம் ஒன்று. கரூர் வட்டத்திலே, 8 கிராமங்கள் இருக்கின்றன. கரூர் வட்டத்திலே இருக்கின்ற தொழிற்சாலைகளிலே, தொழிலாளர்கள் நிறைய பேர் வேலைகளிலே ஈடுபட்டு இருக்கின்ற காரணத்தால், அரவக்குறிச்சி பகுதியைப் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக அறிவிக்க முடியாது. அதேசமயத்திலே, அரவக்குறிச்சி வட்டத்தைப் பொறுத்தளவில், அங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, அங்கே தொழிற்சாலைகள் இல்லை. எந்தத் தொழிற்சாலையும் இல்லாத காரணத்தால், அரவக்குறிச்சி வட்டத்திற்கு வேண்டுமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தால், நிச்சயமாகப் பரிசீலிப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் வறட்சிப் பகுதியாக அறிவித்துப் பல்வேறு

சலுகைகள் வழங்கப்படுவது வழக்கமான ஒன்று. குறிப்பாக, காவிரி டெல்டா பகுதியாக இருக்கின்ற தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்கள் மிகப் பெரிய வறட்சிக்கு இலக்காகி பாதிக்கப்பட்டன. அதற்கான வகையிலே, நம்முடைய அரசும் நில வரி தள்ளுபடி செய்து, விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கி, கடன் சலுகைகளையும் செய்து, மகத்தான சாதனை படைத்திருக்கிறது. அப்படிச் சாதனை படைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்--வறட்சியால் பாதிக்கப்பட்டு, குத்தகை செலுத்த இயலாத நிலையிலே விவசாயிகள் இந்த ஆண்டுகளிலே இருக்கிறார்கள்; இது தனியார் நிலங்களிலேயும் இருக்கிறது; கோயில் மடத்து நிலங்களிலேயும் இருக்கிறது; அதனால் நில வெளியேற்றம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது--அந்த நில வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான முயற்சியையும், வறட்சிக் காலங்களிலுள்ள குத்தகையைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, அந்த விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குத்தகைப் பாக்கி சம்பந்தமாக, வெள்ளம், வறட்சி ஏற்பட்ட காலங்களிலே சலுகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர், திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

## கோட்டாட்சியர் அலுவலகம்

***2028 திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், அரூர், பாப்பிரெட்டிபட்டி வட்டங்களை உள்ளடக்கி, அரூரில் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?